
# ரேவதி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ ரேவதி சக்தி**

பரிபாக வேதனம் வரோதயானந்தம்

பதபாலனம் பரம யோகம்

**3. திருப்பாவைபாசுரம் – 19 ரேவதி இயல்பு**

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்

மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி

கொத்தமலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்

வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்

மைத்தடங் கண்ணினாய் நீ உன் மணாளனை

எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்

எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்

தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/c_lxkb2RlXE**

**விளக்கம் :**

பதபாலனம் என்கின்ற சொல்லாட்சி திறனை வாய் திறவாய் என்று பாசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ரேவதியின் சொல் செயலாகும். ரேவதியின் சொல் வேதமாகும். ரேவதியின் சொல் அரசாணையாகும். இந்த சொல்லாட்சி செல்வாக்கு அனைவருக்கும் கிட்டாது. எனவே இந்த சொல்லாட்சி திறனை எட்டுமளவுக்கு ரேவதி நக்ஷத்ரகாரர்கள் கடுமையான பயிற்சியும்,

உண்மையான உழைப்பையும், திண்மையான அறிவையும் தன்னகத்தே கொண்டவர்களாக விளங்குவார்கள். இவர்கள் கௌரவப்படுத்த படுவார்கள். குத்து விளக்கெரிய அருட்பெருஞ்ஜோதியுடன் கோட்டுக்கால் கட்டில் மேல் தனிப் பெருங்கருணையுடன் கொத்தளர், பூங்குழல், நப்பின்னையுடன் பிரியாமல், பிரியாவரம் பெற்ற இந்த தம்பதியினர் கொண்டிருக்கும் தகவல்களும், தத்துவங்களும் ஏராளம், தாராளம். எனவே இவர்கள் முன்னின்று சென்றால் எங்கு, எப்படி முடிக்க வேண்டுமோ பரிபாக பக்குவத்தில் அதை அங்கு அப்படி முடித்து வைப்பார். உதய இரவாயினும், பகலாயினும் உதய ஆனந்தம் மிகுந்த ரேவதியே வருக.

மைத்தடங் கண்ணியாய் ! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்

இந்த பரிபாக வேதக்கலையின் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் பரமயோகம் நிறைந்த ரேவதி நக்ஷத்ரகாரர்களாவர். இந்த ஜீவாத்மா, பரமாத்மா இணைப்பு எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் தத்துவம் மட்டுமல்ல. பரமயோகம் நிறைந்த செயலாக்கம், மற்றும் செயல் திறன் உதயாதி ஆனந்த அலுவல்களில் அடங்கியிருக்கும்.

உதய ஆனந்த பரிபாலனம் என்பது மெத்தென்ற பஞ்சசயனத்தில் கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறந்து பேசுவது அனைத்தும் உலகியல் மகிழ்ச்சிக்கே; ஆண் பெண் உறவிற்கு புருஷோத்தமன் ஒருவரே ஆண் மகனாவார். மற்ற அனைவரும் மைத்தடங் கண்ணியாய் என்று செயல்படும் ஆர்வமிகு பெண்களே, பெண்களே, பெண்களே.

எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் பரமன் புகழ் பாடி, பரமன் அடி தேடி, பரமன் துணை தேடி, பரமன் இணை பிணைந்து, பிரியாமல் இருப்பதே மனித தத்துவமாகும். இந்த நிலைப்பாடு ரேவதிக்கு பரமயோகமாக, உடலிலும், உள்ளத்திலும் மச்சங்கள் நிறைந்துள்ளது. ரேவதியே வருக! ரேவதியே அருள்க!

## 4. வேதத்தில் ரேவதி ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

விச்வரூபாய வித்மஹே
பூஷ்ண தேஹாய தீமஹி
யோக ரக்ஷாய தீமஹி
தன்னோ ரைய்யதி ப்ரசோதயாத்

அனேக யோகம் அங்கமெலாம்
யோகப் பிரவேசம் தங்கம் எலாம்
விஸ்வரூபம் அனு தின உதயம்
ரேவதி சொல்லே நமோ நமோ

நித்திய புண்ணியம் உனதாகும்
நிரந்தரம் உனது செயலாகும்
நிகரே தமக்கு இல்லையெனும்
நிச்சய தாரகை நமோ நமே

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. ரேவதி கவிதை

தனிப்பெருங் கருணை நீ! பரிபாக வேதம் நீ!

மேலான யோகம் நீ! பக்குவமான ஞானம் நீ!

பதபாலனம் பரிபாலனம் நீ! பேரின்ப ஆரம்பம் நீ!

அருட்பெருஞ் ஜோதி நீ! அருள் பெறும் ஜோதி நீ!

தயவு திரு கோலம் பெற காலத்தினால் மலர்பவளே

வாய்மை திரு வேதம் காண தயானந்த சரஸ்வதியே

சாந்தி திரு அடக்கம் பெற விட்டுக்கொடுக்கும் வீரநங்கையே

அன்புதிரு உருவாக்கும் இறுதி நிலை இன்பமது மங்கையே

தவங்கள் பல உண்டு ஞானம் பெற வழி உண்டு

சித்துக்கள் பல உண்டு பக்குவம் பெற ரேவதி உண்டு

வேதங்கள் பல உண்டு எளிதில் ஞானம் பெற அசோகம் உண்டு

சுகபோகம் பல உண்டு துணிவான செயலாலே எதிரி வீழ்வதுண்டு

சட்டத்திட்டங்கள் கட்டிமுட்டி தலைநோகும்

பட்டம் பதவிகள் பல இருந்தும் மனம் நோகும்

வட்டகட்டங்கள் வழக்கினால் நம்பிக்கை மூடமாகும்

நட்டநாட்டங்கள் பலவென்றாலும் சுகமே சோம்பலாகும்

கற்பூர நாயகியே கனகவல்லி மனைவியை மதிக்கும் ரேவதி

பொற்பூர நாயகியே பூரணவிண்மீன்களை பூட்டி வைக்கும் கோமதி

இருபத்தி ஏழு வகைகளுமே வந்து எழுந்து வணங்கும் சந்திரமதி

நான் யான் என்று அறிந்து கோல் அறிந்து தொழுகின்ற சாருமதி

## 6. அபிராமி அந்தாதியில் ரேவதி சக்தி

**உள்ளத்தில் ஒளி உண்டாக**

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு

முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த

வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது; நாம்

மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

**மனநிலை தூய்மையாக**

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்

அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி; அறிவிழந்து,

சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்

தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

**மன உறுதி பெற**

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது

ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்

அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்

குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

**எங்கும் பெருமை பெற**

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்

யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய

சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்

ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ரேவதி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் யஜ்ஞுப்ருதே நம | – யக்ஞும், யாகம் இரு மாயனே போற்றி |
| ஓம் யஜ்ஞுக்ருதே நம | – முன்னுரையும், முடிவுரையும் நீயே போற்றி |
| ஓம் யஜ்ஞுதே நம | – முதல்வனே, முன்னவனே போற்றி |
| ஓம் யஜ்ஞுபுஜே நம | – வேள்விவின் வினையே போற்றி |
| ஓம் யஜ்ஞுஸாதநாய நம | – வேள்வி சாதனையாளரே போற்றி |
| ஓம் யஜ்ஞாந்தக்ருதே நம | – அவிர்பாகமே, ஆவி நீயே போற்றி |
| ஓம் யஜ்ஞுகுஹ்யாய நம | – மந்திர, ஞான, தந்திர யந்திரமே போற்றி |
| ஓம் அந்நாய நம | – யாகத்தில் உள்ள தியாகப் பொருளே போற்றி |
| ஓம் அந்நதாய நம | – உலகத்தை கடக்கும் அன்னதாதவே போற்றி |
| ஓம் ஆத்மயோநயே நம | – ஆத்ம, சூட்சும சஞ்சாரமே போற்றி |
| ஓம் ஸ்வயம்ஜாதய நம | – கருவியும், கர்தாவும் நீயே போற்றி |
| ஓம் வைகாநாய நம | – திருப்பாற்கடல் ரங்கநாதனே போற்றி |
| ஓம் ஸாமகாயநாய நம | – இசையெனும் சாம வேதமே போற்றி |
| ஓம் தேவகீநந்தநாய நம | – உலகம் சுற்றும் வாலிபனே போற்றி |
| ஓம் ஸ்ரஷ்ட்ரே நம | – உலகியல் மாயைகளின் மாண்பே போற்றி |
| ஓம் க்ஷிதீஸாய நம | – பத்து இசைகளின் புனிதமே போற்றி |
| ஓம் பாபநாஸநாய நம | – வரங்களின் உதயமே போற்றி |
| ஓம் ஸங்கப்ருதே நம | – பரம யோகமே போற்றி |
| ஓம் நந்தகிநே நம | – பரிபாக பாஞ்ச சன்னிய சங்கநாதமே போற்றி |
| ஓம் சக்ரிணே நம | – பாவ மன்னிப்பு அளிக்கும் பண்பாடலே போற்றி |
| ஓம் ஸார்ங்க தந்வநே நம | – ஆன்மீக குத்துவாள் அன்னமய்யாவே போற்றி |
| ஓம் கதா தராய நம | – இந்திரிய ஒழுக்கத்தை நிர்வகிக்கும் சக்கரமே போற்றி |
| ஓம் ரதாங்கபாணயே நம | – சாரங்கமே, சரியான இலக்கு நோக்கியவரே போற்றி |
| ஓம் அக்ஷப்யாய நம | – புத்திசாலியான பல்சுவை கதாயுதமே போற்றி |
| ஓம் ஸர்வ–ப்ரஹரணாயுதாய நம | – சக்ரதாரியான சூத்ரதாரியே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ரேவதி சக்தி

முகுந்தா முக்திநிலயாமூலவிக்ரஹ ரூபிணீ
பாவஜ்ஞாபவரோகக்னீ பவசக்ரப்ரர்த்தினீ

சந்த ஸாராசாஸ்த்ரஸாராமந்த்ரஸாராதலோதரீ
உதாரகீர்த்தி ருத்தாமவைபவாவர்ண ரூபிணீ

ஜன்மம்ருத்யு ஜராதப்த ஜந விச்ராந்தி தாயினீ
ஸர்வோகநிஷ துத்குஷ்டா சாந்த்யதீத கலாத்மிகா

கம்பீராக கநாந்தஸ்தாகர்விதாகானலோலுபா
கல்பனாரஹிதாகாஷ்டாகாந்தாகாந்தார்த்த விக்ரஹா

கார்யகாரண நிர்முக்தாகாமகேலீ தரங்கிதா
கநத்கநகதாடங்காலீலா விக்ரஹ தாரிணீ

அஜாக்ஷயவிநிர்முக்தாமுக்தாக்ஷிப்ரப்ரஸாதினீ
அந்தர்முக ஸமாராத்யாபஹுர்முக ஸ்துர்லபா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் ரேவதி சக்தி

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம் கொடுக்கும்

ஒருதரம் கவசமோதின் உள்ளமுக்குப் போகும்

இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்

மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு

நான்குமுறை யோதி தினம் நல்லவரம் பெறுவீரே

ஐந்துமுறை தினமோதிப் பஞ்சாக்ஷரம் பெற்று

ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்

ஏழுமுறை தினமோதின் எல்லாம் கவசமாகும்

எட்டுமுறை ஏத்திடின் அட்டமா ஸித்தி கிட்டும்

ஒன்பது தரமோதிம் மரண பயமொழியும்

பத்துதர மோதி நித்தம் பற்றறுத்து வாழ்வீரே

கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசி

ஸ்கந்தகுரு கவசமோதி ஸ்கந்தகிரி ஏறிவிட்டால்

முந்தை வினையெல்லாம் ஸ்கந்தன் அகற்றிவிடுவான்

நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்

கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்து

ஸ்கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி

உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்

சித்தமலம் அகன்று சித்த சுத்தியும் கொடுக்கும்

கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே

கண்டு வழிபட்டு ஸ்கந்தகிரி யேறிடுவீர்

ஸ்கந்தகிரியேறி ஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்

பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்!!

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி ரேவதி சக்தி

ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.(47)

அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே.(48)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 10. ராகங்களில் ரேவதி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நாசிகபூஷ்ணி | கோகிலம் | ரசிக பிரியா | ரசிக பிரியா |

## 11. மூலமந்திரம்

நம் யோ ஹோ ரெங் கே க்யோ
ஹூம் தை ஃபோ மீலா

## 12. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பனை | தங்க அரளி | செஞ்சந்தன | மஞ்சபால |

## 13. பரிகாரம்

- பச்சை நிற பிஸ்தாபர்பியை கணபதிகோயிலில் பிரசாதமாக கொடுக்கவும்.
- பச்சைப்பயிறு பசுமாட்டிற்கு அளிக்கவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்,** காருகுடி - திருச்சி.


Aathma Trust (ஆத்ம லிங்கம்)
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra